# ராஜம் கிருஷ்ணன் நாவல்களில் சடங்குமுறைகள்

106

**டி. வஞ்சிக்கொடி & முனைவர் சு. பால்பாண்டி**
**தமிழ்த்துறை,கலை மற்றும் அறிவியல் புலம்**
**பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்**
**சேலையூர், சென்னை-600073**

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு சூழலிலும் சடங்குகள் நிகழ்கின்றன. மனித நம்பிக்கையின் வெளிப்பாட்டினை நிகழ்த்தும் முறைகளே சடங்குகளாகும். ஒவ்வொரு செயலும் எவ்வாறு நிகழவேண்டும் என்ற முறையினை தலைமுறைத் தலைமுறையாகக் கொண்டு செல்பவை சடங்குகளே ஆகும். தனிதனிடத்திலும், குழுக்களிடத்திலும் காணப்படும் பழக்க வழக்கங்களே காலப்போக்கில் சடங்குகளாக மாறுகின்றன. மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகளுக்குச் சடங்குகள் செயல் சார்ந்த விளக்கமளிக்கின்றன.

சடங்குகளில் இடம்பெறும் பொருட்கள் உள்ளார்ந்த விளக்கங்களைக் கொண்டிருக்கின்றன. சான்றாக இந்துக்களின் திருமணச் சடங்கில் இடம்பெறும் அருகம்புல் புதிதாக இணையும் தம்பதியினரின் குடும்பம் நன்கு நிலைத்திருக்க வேண்டும் என்பதை உள்ளீடாகக் கொண்டிருப்பதனை அறிய முடிகிறது. மேலும், பெண்களுக்கான பூப்புச்சடங்கு ஊரறிய நடத்தப்படுவதற்குக் காரணம் பெண்கள் வீட்டைவிட்டு வெளியில் வரலாகாது என்ற நிலையில், இவள் திருமணம் புரிந்துகொள்ள தயாராகிவிட்டால், இனி பெண் கேட்டு வருபவர்கள் வரலாம் என்ற ஒருவித உட்பொருள் ஒளிந்திருப்பதைக் காணலாம்.

எனவே தான் 'சடங்குகளில் சமூகப் பண்பாட்டை நோக்குதல் இன்றியமையாதது"1 என்கிறார் மாலினோவ்ஸ்கி. ஒவ்வொரு இனத்திற்குமான பண்பாடு அவர்களின் சடங்குகளிலும் பிரதிபலிக்கிறது எனலாம். 'வெவ்வேறு நாகரிகங்களில் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் அவற்றின் சடங்குகளில் மிகத்தெளிவாகப் பிரதிபலிக்கின்றன"2 என்ற நரேந்திரநாத் பட்டாச்சார்யாவின் கருத்து, ஓர் இனப்பண்பாட்டை அறிய சடங்குகள் பற்றிய ஆய்வு மிக முக்கியம் என்பதை வலியுறுத்துகிறது.

நாவல்களில் காணப்படும் பிறப்பு, இறப்பு, திருமணம் மற்றும் இன்னும் பிற சடங்குகள் தொடர்பான குறிப்புகளைக் கொண்டு மக்களின் பண்பாட்டை அறிய இயலும் என்பதால் இங்கு சடங்குகள் குறித்த செய்திகள் தேவைப்படுகின்றன.

**பிறப்புச் சடங்கு**

மக்களின் வாழ்வில் மாபெரும் செல்வமாகப் போற்றப்படுவது மக்கட் செல்வமாகும்.

'பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற."3

என்று வள்ளுவர் மக்கட் செல்வத்தின் பெருமையைச் சொல்லியுள்ளார். கிடைத்தற்கரிய இம்மக்கட் செல்வத்தைக் காக்கச் செய்யப்படும் சடங்குகளே ~பிறப்புச் சடங்குகள்| எனப்படுகின்றன. பிறப்புச் சடங்கில் சேனை தொடுதல், பெயர் சூட்டுதல், காது குத்துதல் போன்ற சடங்குகள் மக்களின் வாழ்வில் சிறப்பிடம் பெறுபவை ஆகும்.



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

**சேனை தொடுதல்**

குழந்தைப் பிறந்தவுடன் பெரியவர்களை அழைத்துக் குழந்தையின் நாவில் இனிப்புக் கலந்த பால் அல்லது நெய் தொட்டு வைத்து வாழ்த்தும் வழக்கத்தையே ~சேனை தொடுதல்| என்பர். ~சேனை| என்பதைக் ~குழந்தைப் பிறந்தவுடன் புகட்டும் இனிப்புக் கலந்த திரவ உணவு| என்கிறது தமிழ் அகராதி.

படகர்களிடம் பிறந்த குழந்தைக்கு இனிப்புக் கலந்தப் பாலை நாவில் இட்டு வாழ்த்தும் சடங்குமுறை வழக்கத்தில் உள்ளது.

நாவலில் லிங்கையா தன் தங்கையின் குழந்தைக்கு இனிப்புக் கலந்தப் பாலை இட்டு வாழ்த்துவதை, 'நல்ல வீட்டில் வாழ்க்கைப்பட்டு ஒன்று விதைத்தால் ஓராயிரம் பெருக. வீடு நிறை மக்களுடன் சுகமாக இருக்கட்டும் என்று வாழ்த்திக் குழந்தையின் நாவில் பாலை வைத்தப் பின், பேரென்ன, அம்மே"4 என்ற வரிகள் உறுதிப்படுத்துகிறது.

**பெயர் சூட்டுதல்**

பிறப்புச் சடங்கில் ஒன்றாக குழந்தைக்கு பெயர் சூட்டும் சடங்கு நிகழ்த்தப்படுகிறது.

பரதவர்கள் அந்நியப் படையெடுப்பிற்குப் பிறகு மதம் மாறினாலும் அம்மதத்திற்கு ஏற்றாற் போன்று ~ஞானஸ்நானம்| என்ற பெயரில் இச்சடங்கினைச் செய்கிறார்கள். ஞானஸ்நானம் பெறாத குழந்தை நரகத்திற்குச் செல்லும் என்ற நம்பிக்கை பரதவர் இன மக்களிடையே காணப்பட்டதை, ~அலைவாய்க்கரையில்| நாவலில் ~ஏலி| தன் குழந்தை ஞானஸ்நானம் பெறாது இறந்துவிட்டதை நினைத்து வருந்தும் பின்வரும் பகுதி உணர்த்துகிறது.

'ஒங்கக்க மவெ ஞானஸ்நானமில்லாம இருட்டு ஸ்தலத்துப் போவு. என்னியல்லாங் கெனாக்கண்டே! புள்ளக்கி வெள்ளயுடுப்புப் போட்டு, கோயில் சுரூபமெல்லாம் வத்தி எரிய, எல்லா மணியும் அடிக்க, ஒங்கக்க ஆத்தாஃகும்பாதிரி ஆத்தாளாயிக் கையில வச்சிக்க, சாமி நெம்பப் பரிமளத்தயிலமும் நீரும் வச்சி, இஸ்பிரி சாந்துவைக் கூட்டிப் பேரு சொல்லமிண்டு... எல்லாம் வெறும் கெனாவப் போச்சி."5

இதிலிருந்து பரதவர் இன மக்கள் ~ஞானஸ்நானம்| சடங்கிற்கு தரும் முக்கியத்துவத்தை அறியலாம்.

**திருமணச்சடங்கு**

ஒவ்வொரு இனச்சமூகமும் திருமண நிகழ்வினைப் பல்வேறு சடங்குகளைச் செய்து நிகழ்த்துகின்றன. இச்சடங்குகள் அச்சமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்துவனவாகவும், தனித்துவம் பெற்றவையாகவும் விளங்குகின்றன.

படகர்களின் திருமணச்சடங்கில் பால் மற்றும் நீர் முக்கிய இடம்பெறுகிறது. மணமகள் வீட்டிலிருந்து மணமகன் வீட்டிற்கு அழைத்து வரப்படும் மணப்பெண்ணை மணமகனின் வீட்டு வாயிலில் நிற்க வைத்து அவளது கைகளில் நீர் வார்க்கப்பெறுகின்றது. இவ்வாறு வார்க்கப்பெறும் நீருக்குக் ~குடத்திலிருந்து ஒழுகும் நீர் போல் வழி வழி வரும் இந்தக்குடும்ப வளர்ச்சியை ஏற்றுக் கொள்வாயாக| என்று பொருள் கொள்ளப்படுகிறது. மேலும், இவர்களிடையே திருமணத்தில் நிகழ்த்தப்பெறுகின்றது. நீர் வார்க்கும் சடங்கினையும், மாலை அணிவிக்கும் சடங்கினையும் நாவல்,

~நீரைக் குடத்தினின்றும் மணப்பெண்ணின் கைகளில் முன்முளை வார்த்தார். நீர் அவள் கைகளை நனைத்துக் கால்களில் விழுந்து ஓடியது. பிறகு கட்டிலிருந்து, பொற்கம்பியில் கோக்கப் பெற்ற மணிமாலையை எடுத்துப் பாருவின் கழுத்தில் போட்டு, அவளை உள்ளே வரவேற்றனர்."6

என்ற சடங்குமுறை படகர்களின் திருமணத்தில் காணப்படுகின்றது. மேலும் திருமணம் முடிந்தவுடன் புதுப்பாடலுடன் சாலை சோறு மணப்பெண்ணிற்கு பரிமாறப்படுகிறது. பின்னர் கோத்தரின் இசை முழக்கத்துடன் நிறைவுபெறுவது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு நிகழ்த்தப்பெறும் படகர்களின் திருமணச் சடங்கில் அருவிநீர், பால், சாமை ஆகிய சடங்குப்பொருட்கள் அவர்கள் கால்நடைகளை மதிக்கும் நிலையையும், கால்நடைகளுக்குத் தரும் முக்கியத்துவத்தையும், அருவிநீர் புனிதமாகக் கருதப்படும் நிலையையும் எடுத்துரைக்கின்றன. இந்நிலை கடல்நீரைப் புனிதமாகக் கருதுவது போல, படகர்களின் அருவிநீரை புனிதமாகக் கருதும் பண்பாட்டினை வெளிப்படுத்துகிறது.

பரதவர்களின் சடங்கு நிகழ்வுகளில் ~குடிமகன்| என்பவன் முக்கியப் பங்கு வகிப்பவனாக் காணப்படுகிறான். பரதவர்களின் வாழ்விலும், சாவிலும் வந்து சடங்குகளைச் செய்யும் உரிமையுள்ள குடிமகன் பரம்பரையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் உண்டு. பரதவர்களது திருமணச் சடங்குகளில் மாப்பிள்ளை சவரம் செய்து கொள்ளும் சடங்கில் குடிமகனின் பங்கு மிக முக்கியமானதாகும்.

மாப்பிள்ளை வீட்டின் முற்றத்தில் மணைப்பொட்டு மாப்பிள்ளையைக் கடலைப் பார்த்த வண்ணம் அமரச்செய்து, குடிமகன் மாப்பிள்ளைக்கு முகச்சவரம் செய்யும் சடங்கு நிகழும். அப்போது குடிமகனுக்குப் பக்கத்தில் கிண்ணம் ஒன்று வைக்கப்படும். பெண் வீட்டைச் சேர்ந்தோரும் மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தோரும் தங்களின் கொடை வன்மையினைக் காட்ட ஏற்ற இடமாகக் கருதி இருவீட்டாரும் பணத்தை மாறிமாறிப் பொடும் நிகழ்வினை உறவினர்கள் அனைவரும் கண்டு ரசித்து சிரித்து மகிழ்வர். மாப்பிள்ளையின் முகச்சவரத்தை முடித்த பிறகு வரிசைப் பணத்துக்கு உரிமையாளனாக விடுவான் குடிமகன். இறுதியாக அனைவருக்கும் விருந்து உபசரிப்பு நடைபெறும். இதனை நாவல் பின்வருமாறு காட்டுகிறது.

சில்க் சட்டையும் தங்கக்கடிகாரமுமாக வந்திருக்கும் பெண்ணின் தாய்வழி மாமன்கள் ஒரு ஐந்து ரூபாய் நோட்டெடுத்து வைக்கிறான். 'பெரிய இவ்வுரு, அஞ்சுரூவா நோட்டு வைக்கான்!" என்று ஐந்தோடு ஒரு குட்டியை எட்வின் சேர்க்க, மரியான் ஆறு ரூபாயாக வைக்கிறான். 'லே நாங்க கொடைக்குடும்பம்?..." என்று பெண்ணின் சின்னத்தா மகன் அம்புரோஸ், பத்து ரூபாய் நோட்டெடுத்து வைக்கிறான். கூச்சலும் கோஷமும் சிரிப்பும் முக்கால் பவுன் மோதிரத்தையே கழற்றிச் சந்தனக் கும்பாவில் போட்டு, இந்தப் போட்டியை முடித்து வைக்கிறான்.

இந்தச் சளைக்காத போட்டிக் கொண்ட, இசக்கிமுத்துவின் வாயெல்லாம் பல்லாக மலரச் செய்கிறது. மாப்பிள்ளையைப் பையனுக்குச் சொகுசாக மீசையை அழகுபடுத்திச் சவரத்தை முடிக்கிறான். விருந்தினர் அனைவருக்கும் இலை போட்டு பழமும், இட்லியும் பணியமும் கொண்டு வந்து இளம் பெண்டிர் உபசரிக்கின்றனர். இசக்கிமுத்து பலகாரம் உண்டு, மோதிரம், முப்பது ரூபாய் பணமும் புதிய வேட்டியும் தலைச்சுற்றுமாகத் தன் குடிலுக்குத் திரும்புகிறான்."7 மேலும், திருமணத்தில் மேளம் வாசிப்பதும் குடை சுருட்டி, குடை பாவாடை ஆகிய சின்னங்களைத் தூக்கிக்கொண்டு ஊர்வலம் செல்வதும் குடிமகன் தான்.

இவ்வாறு சடங்கு நிகழ்வுகளில் பரதவர்கள் குடிமகனுக்கு முக்கியப் பங்கினை அளிப்பதை இந்நாவல் மூலம் அறியமுடிகிறது. மற்ற இரண்டு நாவல்களிலும் திருமணச்சடங்கு குறித்த செய்திகள் இடம்பெறவில்லை.

**இறப்புச்சடங்கு**



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

பிற சடங்கு முறைகளைவிடவும் அதிகமாகச் சடங்கு நிகழ்த்தும் முறைகள் இறப்புச் சடங்கில் நிகழ்த்தப்படுகின்றன. ஒருவன் இறந்தப்பின்பும் அவனது ஆவி இவ்வுலகில் இருந்து அவனைச் சார்நதோரால் நிகழ்த்தப்பெறும் சடங்குகளைக் கண்டு கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையிலும், இறந்தவனின் ஆத்மா அவனுக்குச்செய்யும் சடங்கின் வழியாகத் தெய்வ உலகம் அடையும் என்ற நம்பிக்கையிலும் இறப்புச் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன.

படகர்களின் இறப்புச் சடங்கில், இறந்தவரை அடக்கம் செய்யும் நாளன்று இறந்தவரின் உடல் நீரினால் சுத்தம் செய்யப்படுகின்றது. புதிய ஆடை உடுத்தப்படுகிறது. மண்வெட்டி, வாள், போன்ற ஆயுதங்களும், வெல்லம், தினைமாவு, பணியாரம், சாமை, அரிசி, கடலை, பொரி போன்றவையும் இறுதிச்சடங்கில் இடம்பெறுகின்றன. படகர்களின் இறுதிச்சடங்கு நிகழ்வினை, 'அவருக்கு காலமெல்லாம் வழக்கமாக முள்ளும் மண்வெட்டியும் வாளும் செய்து தந்த முட்டுக்கோத்தன், அவருடைய தயாள குணங்களைக் கூறி அழுதவண்ணம், இறுதியாக அவருக்கு ஆயுதங்களை கொண்டு வைத்தான். மைத்துனன் மனைவியும், மூக்குமலை உறவினர்களும், பணியாரங்கள் சுட்டுக் கூடைகளில் கொண்டுவந்து வைத்தார்கள். வெல்லமும், தினைமாவும், சாமையும், அரிசியும், கடலையும், காஞ்சிப்பொரியும், புகையிலையும் ஒன்று மீதமில்லாமல் தம்பியின் வானுலக யாத்திரைக்கு அண்ணனும் மற்றவரும் சேகரித்து வைத்தார்கள்,"8 என்ற படகர்கள் இறந்தப் பின்பு அவர்கள் விரும்பி உண்ணும் உணவையும், பயன்படுத்திய ஆயுதங்களையும் இறந்தவரின் உடலுக்குச் சார்த்துவர். உறவினர்களும், பழகியவர்களும் தம் இறுதி மரியாதையைச் செலுத்தும் விதமாக வயதில் மூத்தவர்கள்ன தலைப்பக்கம் வந்து மணியடித்து வணங்குவர். வயதில் சிறியவர்கள் கால்களைத் தொட்டு வணக்குவர். இறுதியாக வண்ண வண்ணத் துணிகளால் பல அடுக்குகளாக அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் கோத்தரின் இசை முழக்கத்தோடு எடுத்துச்செல்வர். தகனக்கிரியைகள் செய்வதற்கு ஏற்காத நாளாக செவ்வாய்க்கிழமையைக் கருதுகின்றனர். இவ்வாறான சடங்கில் பிற இசைக்குழுவினரான, தொரியர், முட்டுக்கோத்தர் போன்றோரும் அவர்களின் தொழில் சார்ந்தப் பொருட்களை வைத்து இறந்தவருக்குச் சடங்கு நிகழ்த்துவது படகர்களின் சமூகப் பண்பாட்டைப் புலப்படுத்துவதாக அமைகிறது.

**கொரம்பு**

கொரம்பு என்றால் கருமாதி என்று பொருள். இறந்ததிலிருந்து பத்தாம் நாள் செய்யும் இறுதிச் சடங்காகும். இறந்தது கணவனாக இருந்தால் மனைவி தன் அணிகலன்களைக் களைதல் நிகழ்வு இச்சடங்கில் இடம்பெறுகிறது.

~அலைவாய்க்கரையில்| நாவலில் காணப்படும் பரதவர்களின் கிறித்தவ சமயம் சார்ந்தவர்களாவர். எனவே அவர்களின் இறப்புச் சடங்கில் கிறித்தவ முறைப்படியான சடங்கு முறைகள் பின்பற்றப்படுகின்றன. இறந்தவரின் எடல் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியானது புதைப்பதற்கு முன்னால் சாமியாரால் மந்திரிக்கப்படுகிறது. குடிமகன் தோண்டியப் பள்ளத்தில் பெட்டியை இறக்கி ஜபம் சொல்லி சாமியார் முதல் மண்ணைப்போடுவார். இதனை,

'சாமி மையம் மந்திரிக்க வருகிறார் குடிமகனாகிய நாசுவன் மேளம் எடுக்கிறான். குடை சுருட்டி, குடை பாவாடை எல்லாம் தொடர. ஸ்டெல்லாவின் சடலம் மந்திரிக்கப்பெற்று மையவாடிக்குச் செல்கிறது. குடிமகன் குழியைத்தோண்ட பெட்டியை இறக்கியதும் சாமியார் ஜபம் சொல்லி முதல் மண்ணைப்போடுகிறார்."9



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

இவ்வாறு நாவலில் பதிவாகி உள்ளதில் இருந்து இறுதிச்சடங்கில் மண்ணுக்குள் அடக்கம் செய்ய, மண்ணை அகழ்ந்து குழியெடுப்பதும் குடிமகன் தான் என்பது தெளிவாகிறது. மேலும், இச்சடங்கில் சாமியார் மந்தரித்தப் பிறகுதான் இறுதிச்சடங்கு நடைபெறுவதை அறியமுடிகிறது.

**பிற சடங்குகள்**

வாழ்க்கை வட்டச் சடங்குகள் அன்றி மற்ற சடங்கு நிகழ்வுகளையும் அறிந்து கொள்வதின் மூலம் அவ்வின மக்களுக்கே உரிய தனித்தனமையினை புரிந்துகொள்ள இயலும் என்ற வகையில் நாவல்களில் பதிவாகியுள்ள பிற சடங்குகள் பற்றியச் செய்திகள் பின்வருமாறு அமைகின்றன.

தொழில்முறை சடங்கு

~கரிப்பு மணிகள்| நாவல் உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் அத்தொழில் சார்ந்த சடங்கு முறைகள் இந்நாவலில் காணக்கிடைக்கின்றன.

உப்பளங்களில் விளைவிக்கக்கூடிய முதலுப்பை ஒவ்வொரு ஆண்டும் அம்பாரமாகக் குவித்துப் பூசைகள் செய்வதை நாவலின் பின்வரும் பகுதி காட்டுகிறது.

'நான்கு மூலைகள் கொண்ட சிறு சதுரமேடு போல் கட்டப்பெற்றிருக்கும் பூடத்துக்கு வெள்ளையடித்து அழகு செய்து... அதன் முன் வாழையிலை விரித்து, உப்பை அள்ளி வைத்து, கற்பூரம் காட்டிக் கும்பிடுகிறான் பிச்சைக்கனி. அந்த முதலுப்பு முதலாளிகள் வீட்டுக்குப ;போகும்."10

இவ்வாறு தொழில்முறைச் சடங்கு இந்நாவலில் சுட்டப்பட்டுள்ளது.

**பால் சடங்கு**

படகர்கள், முதல் முதலாக வந்து குடியேறிய தங்களது முன்னோர்களின் நினைவாக எழுப்பிய ~ஹெத்தாப்பா|வின் கோயிலில் என்றும் அணையாமல் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பைக் காக்கும் பணிக்கு இளமையின் விகாரம் முளைக்காத பால்பருவத்துப் பையனைத் தேர்ந்தெடுப்பர். அப்படி தேர்ந்தெடுக்கும் பையனுக்கு சில கட்டுப்பாடுகள் உள்ளதை பின்வரும் பகுதி உணர்த்துகிறது.

'வீடு சுற்றும் பூராவும் மறந்து, அந்தப் புனித் நெருப்பைப் போற்றும் ஒன்றே அவனுடையது. ஒரு நாளைக்கு ஒரு முறையே அவன் உண்ணலாம். கட்டில் மெத்தை முதலிய சுகங்களை அவன் தானே பொங்கிக்கொள்ள வேண்டும். அந்தக் கோயிலையும் தெய்வ மைதானத்தையும் தவிர அவன் வேறு எந்த இடத்துக்கும் முன் அறிவிப்பின்றிச் செல்லலாகாது. பருவ மங்கையர் அந்தக்கோயிலின் எல்லைக்குள் எக்காரணத்தை முன்னிட்டும் வரமாட்டார்கள். அப்படி வந்துவிட்டாலும் ஐயனின் நெருப்பை காப்பவன், அவர்களிடம் உரையாடக்கூடாது."11

மேற்சொன்ன கட்டுப்பாடுகளுக்கு ஏற்றவனையே தேர்ந்தெடுப்பர். அப்படி தேர்ந்தெடுக;கும் பையனுக்கு ~பால் சடங்கு| என்ற சடங்கினைச் செய்த பின்னரே புனித நெருப்பைக் காக்கும் பணிக்கு அனுப்புவர்.

ஒரு நல்ல நாளில் திங்கட்கிழமையில் பால் சடங்கு நிகழ்த்துவர். வீடு சுத்தம் செய்து அனைவரும் குளித்து சுத்தமாகி எருமையையும் குளிப்பாட்டி அலங்கரிப்பர். வழிவழியாக வந்த ~பால் படி|யைக் கொண்டு குடும்பத்தில் மூத்தவர் கிழக்கு முகமாக அமர்ந்து பால் கறப்பர். பிறகு அந்த பாத்திரத்தை வாங்கி பையன் கறப்பான். கறந்த பாலை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழையும் போது பெண்கள் ஒதுங்கி நிற்பர். எல்லாவிதமான நலன்களும் கிடைக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டு முதலில் உண்கலமாகிய

பெரிய வட்டிலில் சிந்தாமல் பாலை ஊற்றுவர். பிறகு மற்ற கலங்களில் பாலை ஊற்றுவர். அடுத்து சமையல் அறைக்குச் சென்று அங்குள்ள எல்லா பாண்டங்களின் மீதும் பாலைத் தெளித்த பின்னர் தாய் தந்தை மீதும் கூடியிருப்பவர்கள் மீதும் பாலைத் தெளிக்கும்போது,

'வற்றாத பால் வழங்க வளம் பெறுவாய். எருமைகளும் பசுவினங்களும் செழிக்கட்டும்"12 என்று ஒவ்வொருவரும் ஆசிகள் வழங்குவர். பின்னர் மீதியுள்ள பாலை பால்மனைக்கு எடுத்துச்சென்று வைத்துவிடுவர். அதனைத் தொடர்ந்து அனைவருக்கும் விருந்து பரிமாறப்படும். இச்சடங்கு முடிந்த அடுத்த நாளிலிருந்து பாலை பையன் தான் கறக்க வேண்டும். இறைவனை வழிபடுகையில் கடைப்பிடிக்கும் புனித விதிகள் அனைத்தும் பால் கறக்கும் சடங்கைச் செய்கையிலும் கடைப்பிடிக்கப்படுவதால் இவர்கள் பால் கறக்கும் செயலுக்குத் தரும் முக்கியத்துவத்தை அறியமுடிகிறது.

கண்ணிக்கட்டு மதுவே

~மதுவே| என்றால் திருமணம் என்பது பெயர். இத்திருமணம் பெண் கருவுற்ற ஏழாம் மாதத்தில் தான் கணவன் வீட்டில் நடைபெறும். திருமணத்தின் போது தாலி கட்டும் வழக்கம் இல்லை. தாலி என்றால் பொற்கம்பியில் கோர்க்கப்பட்ட மணிமாலை தான். ஒரு நல்ல நாள் பார்த்து உறவினர்கள் அனைவரையும் அழைத்து பந்தல் போட்டு விருந்து உபசரிப்புடன் இச்சடங்கு நிகழ்கிறது.

**முடிவுரை**

பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற வாழ்க்கை வட்டச் சடங்குகளும் தொழில்முறைச் சடங்குகளும் நாவல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக படகர்களின் திருமணச் சடங்கில் நீர், பால், சாமை போன்ற பொருட்கள் இடம்பெறுகிறது. அது, அவர்கள் கால்நடைகளை மதிக்கும் நிலை, அருவி நீர் புனிதமாகக் கருதப்படும் நிலை ஆகியவற்றைச் சுட்;டுகிறது. பரதவர்கள் சடங்கு நிகழ்வுகளில் குடிமகனுக்கு முக்கியப் பங்கினை அளிக்கப்படுகிறது. அளத்து மக்கள் தொழில் சார்ந்த சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இவ்வாறு பல்வேறு சடங்குகள் குறித்தச்செய்திகள் நாவல்களில் பதிவாகியுள்ளதை அறியமுடிகிறது.

அடிக்குறிப்பு

1. சு.சக்திவேல், நாட்டுப்புறவியல், ப.190
2. மேலது, ப.181
3. குறள்.எண்.61
4. இராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், ப.27
5. இராஜம்கிருஷ்ணன், அலைவாய்க்கரை, ப.131
6. இராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், ப.70
7. இராஜம்கிருஷ்ணன், அலைவாய்க்கரை, பக்.188-189
8. இராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், ப.70
9. இராஜம்கிருஷ்ணன், அ]வாய்க்கரை, ப.139
10. இராஜம்கிருஷ்ணன், கரிப்பு மணிகள், ப.73
11. இராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், பக்.46-47



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

12. மேலது, ப.70

துணை நூல்கள்

கைலாசபதி.க. - இலக்கியமும் திறனாய்வும்
சென்னை புக் ஹவுஸ்
சென்னை - 24
மூன்றாம் பதிப்பு - 1981
- தமிழ் நாவல் இலக்கியம்
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்
பிரைவேட் லிமிட், சென்னை
மூன்றாம் பதிப்பு – 1984
கோவிந்தராஜ்.பெ.கீ - இராஜம் கிருஷ்ணன் நாவல்களில்
தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி
மக்களின் சமுதாயநிலை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி
சந்தானம்.கா. - இந்தியாவும் பொதுநல சமுதாயமும்
நவயுகப் பிரசுரலாயம்
காரைக்குடி
இரண்டாம் பதிப்பு - 1947
சரளா ராமகோபாலன் - பெண்கள் உலகின் கண்கள்
ஒளிப்பதிப்பகம்
சென்னை
முதல் பதிப்பு - 1999
சிவகாமசுந்தரி.அ.ப - பெண்களும் பிரச்சனைகளும்
பாவை பப்ளிகேஷன்ஸ்
சென்னை
முதல் பதிப்பு - 1998